**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110290

1. District மாவட்டம் : அரியலூர்
PS காவல்நிலையம்: ல.த.க. பிரிவு அரியலூர். Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 2/2021 Date நாள்: 25.9.2021.

2. (i) Act சட்டம்: prevention of corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Cr.P.C. Sections பிரிவுகள்: 102.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 24.9.2021 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.50 Time to : நேரம் வரை 22.00
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.9.2021 Time நேரம் : 18.00
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.9.2021 Time நேரம் : 18.00

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக சொந்த நடவடிக்கை மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 25 கி.மீ. உதவி. சார்பதிவாளர். அலுவலகம், செந்துறை. அரியலூர் மாவட்டம்.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ந. பாலசாமி
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நடராஜன்.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 4/2021
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் கண்காணிப்பாளர், தொழில்நுட்பம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (நீதிமன்றம்) மற்றும் சிறப்பாணைமையாளர் அலுவலர் அலுவலகம்.
(g) Address : முகவரி மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) .
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. ஸ்ரீராம், உதவியாளர் I/c சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், செந்துறை, அரியலூர் மாவட்டம்.
2. திரு. ஜெகநாதன், அப்பகுதி பணியாளர் (Camera operator), சார் பதிவாளர் அலுவலகம், செந்துறை, அரியலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
யாதொரு தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது** இன்று 25.09.2021 ஆம் தேதி பகல் 18.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.N.பாஸ்கர், கண்காணிப்பாளர் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர் (தற்காலிகம்), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.N.பாஸ்கர், கண்காணிப்பாளர் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர் (தற்காலிகம்), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அய்யா, பொருள் அரியலூர் மாவட்டம் செந்துறை சார்பதிவாளர் அலுவலகம்- 24.09.2021 அன்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது- மேல் நடவடிக்கை வேண்டி புகார் கொடுத்தல் தொடர்பாக. பார்வை 1.திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரின் கடித எண். A1/157/2021, நாள்: 24.09.2021, 2.அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண். RC.No. A2/413/2021, நாள்: 24.09.2021,

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 25/9/21

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் V.VANATHI
Rank: நிலை ......................No. எண் ..........

3.திடீர் சோதனை செயல்முறைகள். நாள் 24.09.2021. நான் அரியலூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண். RC.NO. A2/413/2021, நாள்: 24.09.2021 –ன்படி மாவட்ட துணை ஆய்வுக்குழுவின் தற்காலிக அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளேன். அரியலூர் மாவட்டம், செந்துறையில் உள்ள சார்பதிவாளர் அலுவலர்கள் பொது மக்களிடம் பத்திர பதிவு செய்வதற்காகவும் மற்றும் சான்றிதழ் பெறுவதற்கு கையூட்டு கேட்டு பெறுவதாக அரியலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 24.09.2021 ஆம் தேதி மாலை சுமார் 16.50 மணியளவில் நான், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.V.வானதி மற்றும் அலுவலர்கள் உதவியுடன், மேற்படி செந்துறை சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி செந்துறை சார் பதிவாளர் அலுவலகமானது செந்துறையில் இருந்து இரும்புலிகுறிச்சி செல்லும் சாலையில் தமிழ்நாடு வாணிப கழக சேமிப்பு கிடங்கிற்கு கிழக்கிலும் சார் கருவூலத்திற்கு மேற்கிலும் மேற்படி சாலையில் இருந்து தெற்கு பக்கமாக சுமார் 50 மீட்டர் நடை கற்கள் பதிக்கப்பட்ட நடைபாதையுடன் கூடிய வடக்கு பார்த்த வாசலுடைய அலுவலகம் உள்ளது. மேற்படி படிக்கட்டில் இடது பக்கம் சாய் தளம் உள்ளது. மேற்படி படிக்கட்டின் மேற்கு பக்கம் இரும்பு கூறையுடன் கூடிய வராண்டா உள்ளது. வராண்டாவின் தெற்கே பொது கழிப்பறையும் அதை ஒட்டி தெற்கு பக்கம், மேற்கு நோக்கிய வாசல் உள்ளது. மேற்படி வாசலுக்கு தெற்கில் ஒரு கழிப்பறை உள்ளது. வாசல்படி உள்ளே ட வடிவ ஹால் உள்ளது. மேற்படி ஹாலில் வடக்கு பக்க மூன்று ஜன்னல்கள் உள்ளது. மேற்கு ஜன்னலின் ஓரத்தில் அலுவலக உதவியாளர் இருக்கை உள்ளது.மூன்றாவது ஜன்னலின் ஓரத்தில் மேற்கு பார்த்த இரண்டு இருக்கைகள் உள்ளது. அதில் தெற்கு பக்க இருக்கை சார் பதிவாளர் இருக்கையும் அவருக்கு வடக்கே உதவியாளர் இருக்கையும் உள்ளது. மேற்படி சார்பதிவாளர் இருக்கையை ஒட்டி தெற்கு பக்கத்தில் பதிவறைக்கு செல்லும் வாசல் உள்ளது. மேற்படி பதிவறையானது தெற்கு வடக்கில் உள்ளது. அதில் கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு சுவர்களில் அலமாறிகள் உள்ளது. அவற்றில் பதிவேடுகள் அடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பதிவறையின் நடுவே மர மற்றும் இரும்பு பீரோக்கள் மேற்கு நோக்கிய நிலையிலும் அறையின் மேற்கு சுவற்றை ஒட்டி பீரோக்கள் கிழக்கு பார்த்த நிலையில் உள்ளது. அறை முழுவதும் பதிவேடுகள் அடுக்கப்பட்டுள்ளது. மேற்படி அலுவலக 'ட' வடிவ ஹாலில் தெற்கு பக்கத்தில் கண்ணாடி மற்றும் அலுமினியத்தால் பகுதியாக பிரிக்கப்பட்ட அலுவலகம் வடக்கு பார்த்த பாதையுடன் உள்ளது. மேற்படி இளநிலை உதவியாளரின் இருக்கையும், கணினி பதிவாளர் இருக்கையும், வாசலின் மேற்கு பக்கத்தில் புகைப்பட உதவியார் இருக்கையும் உள்ளது. ஹாலில் தென்மேற்கு பக்கத்தில் EC பார்க்கும் அறையும் அதற்கு மேற்கு பக்கத்தில் பதிவேடுகள் அறையும், EC அறைக்கு தெற்கில் ஒரு சிறிய வராண்டவும் அதற்கு மேற்கே ஒரு பதிவேடுகள் வைப்பறையும் உள்ளது. மேற்படி வராண்டவுக்கு தெற்கில் கிழக்கு மேற்கில் அதற்கு தெற்கில் அலுவலர்களுக்கான கழிப்பறைகளும் உள்ளது. திடீர் ஆய்வு குழுவினர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் வந்தபோது திரு.ஸ்ரீராம்.உதவியாளர் I/c

சார்பதிவாளர், திரு.ஆனந்ராஜ், இளநிலை உதவியாளர், திருமதி.சுகந்தி, இளநிலை உதவியாளர், திரு.சுப்ரமணியன் அலுவலக உதவியாளர், மற்றும் TCS நிறுவனத்தின் ஒப்பந்த பணியாளர் திருமதி சுதா, Data Entry Operator மற்றும் ZIGMA Technologies India (P) Limited நிறுவனத்தின் ஒப்பந்த பணியாளர் திரு.முருகானந்தம் Camera Operator ஆகியோர்கள் இருந்தனர். மேலும் அலுவலகத்தில் பத்திர பதிவிற்காக பொது மக்கள் சிலரும் இருந்தனர். சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அனைவரிடமும் திடீர் சோதனை செய்ய வந்த நோக்கத்ததை தெரிவித்தும் அவர்களை விஜிலென்ஸ் குழுவினருடன் தனித்தனியாக விசாரித்தும் சோதனை மேற்கொண்ட போது இவ்வலுவலகத்தில் ஒப்பந்த பணியாளாராக பணிபுரியும் திரு.முருகானந்தம் என்பவர் தான் கையூட்டாக பெற்று வைத்து இருந்த பணத்தை பதிவறையின் உள்ளே மறைத்து வைக்க முயன்றபோது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.19,550/- மற்றும் அவரது இருசக்கர வாகனத்திலிருந்த பணம் ரூ.5,000/- மொத்தம் ரூ.24,550/- கணக்கு கூறாததால் கைப்பற்றப்பட்டது. அவர் தன் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை. மேலும் திரு.ஸ்ரீராம், உதவியாளர் I/c சார்பதிவாளர் அவர்களது மேஜை டிராயரில் ரூ.7000 தனியாகவும் அவரது பர்ஸில் இருந்த ரூ.4430 மற்றும் அவரது காரில் இருந்த ரூ.3000/- மொத்தம் ரூ.14,430 அவரது சொந்த பணம் ரூ.980 அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது, கணக்கு கூற இயலாத ரூ.13,450 கைப்பற்றப்பட்டது. அலுவலக இளநிலை உதவியாளர் திருமதி.சுகந்தி அவர்களை பெண் காவலர் கொண்டு சோதனை செய்த போது அவரது கைப்பையில் ரூ.200 இருந்தது அதனை அவரது சொந்த பணம் என்பதால் அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.ஆனந்தராஜ், இளநிலை உதவியாளர், அவர்களை சோதனை செய்தபோது அவரது பர்சில் இருந்த ரூ.100-ஐ தன் இருப்பு பண பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்து திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.சுப்ரமணியன், அலுவலக உதவியாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.450 தன் இருப்பு பண பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்து திருப்பி கொடுக்கப்பட்டது. திருமதி சுதா, ஒப்பந்த பணியாளர் அவர்களை பெண் காவலர் கொண்டு சோதனை செய்த போது அவரது கைப்பையில் ரூ.40 இருந்தது. அவர் தன் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை, ரூ.40-ஐ அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் கீழ்கண்டவாறு செந்துறை சார்பதிவாளர் அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேட்டின்படி சொந்த பணம் மற்றும் சரியான முகாந்திரம் கூற இயலாத பணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | சொந்த பணம்/தனிநபர் பண இருப்புப் பதிவேட்டின்படி | கணக்கு கூற இயலாத பணம் ரூ. | ஒப்படைக்கப்பட்ட பணம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஸ்ரீராம், உதவியாளர் I/c சார்பதிவாளர். | 980 | 13450/- | 980 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | திரு.ஆனந்ராஜ், இளநிலை உதவியாளர். | 150 | இல்லை | 100 |
| 3 | திருமதி.சுகந்தி, இளநிலை உதவியாளர் | 200 | இல்லை | 200 |
| 4 | திரு.சுப்ரமணியன், அலுவலக உதவியாளர். | 450 | இல்லை | 450 |
| 5 | திருமதி சுதா, ஒப்பந்த பணியாளர் Data Entry Operator. | பதிவேட்டில் பதியவில்லை | இல்லை | 40 |
| 6 | திரு.முருகானந்தம், ஒப்பந்த பணியாளர் Camera Operator. | பதிவேட்டில் பதியவில்லை | 24,550/- | இல்லை |
| | மொத்தம் | 1,780/- | 38,000/- | 1,770/- |

| |
|---|
| சரியான முகாந்திரம் கூற இயலாத மொத்தப்பணம் ரூபாய் --- 38,000/- |

மேற்படி நபர்கள் சரியான முகாந்திரம் கூற இயலாத மற்றும் கணக்கு கூற இயலாமல் வைத்திருந்த பணம் யாரிடமாது கையூட்டாக பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி மொத்தப்பணம் ரூ.38,000/- திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. செந்துறை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்த பொதுமக்கள் 1. ராஜா,த.பெ. கோவிந்தராஜ் 2. கணபதி, த/பெ.கங்காஜலம் 3. பன்னீர்செல்வம், த/பெ.கதிர்வேல், 4.கருப்பன், த/பெ.முருகன், 5.தனவேல், த/அண்ணாமலை 6.சரவணன், த/பெ மணிமொழி, 7.வாலாம்பாள், க/பெ.ரத்தினம் 8.தனலெட்சுமி, க/பெ கலைமதி 9.நித்திஷ்குமார்,த/பெ. கலைமதி10.காசியம்மாள், க/பெ.பாலசுப்பிரமணியன் 11.இளங்கோவன், த/பெ.சிங்காரவேலன் 12.கருப்பன், த/பெ. கடையாணி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யபட்டது. மேலும் மேற்படி பொது மக்களிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றபடவில்லை. திமர் சோதனையின் போது கீழ்கண்ட ஆவணங்கள் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

| | |
|---|---|
| 1 | செந்துறை சார்பதிவாளர் அலுவலக வருகைப் பதிவேடு 2021 |
| 2 | செந்துறை சார்பதிவாளர் அலுவலக தற்செயல் விடுப்பு பதிவேடு 2021 |
| 3 | 24.09.2021 ஆம் தேதி செந்துறை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் பட்டியல். |
| 4 | செந்துறை சார்பதிவாளர் அலுவலக தனிநபர் பண இருப்புப் பதிவேடு 2021 |
| 5 | ஒப்பந்த பணியாளர் திரு.முருகானந்தம் அவர்களின் பணி ஆணையின் நகல் |
| 6 | ஒப்பந்த பணியாளர் திருமதி.சுதா அவர்களின் பணி ஆணையின் நகல் |

ஒப்பந்த பணியாளர்களுக்கான வருகைப் பதிவேடு பராமரிக்கப்படவில்லை. மேற்படி செந்துறை சார்பதிவாளர் அலுவலக அலுவலர்கள் மற்றும் வெளிநபர்களை விசாரணைக்கு தேவைப்படும் போது ஆஜராகும்படி அறிவுறுத்தப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. 24.09.2021 ஆம் தேதி அரியலூர் மாவட்டம், செந்துறை சார்பதிவாளர் அலுவலக திடீர் ஆய்வின் போது 1.திரு.ஸ்ரீராம், உதவியாளர் I/c சார்பதிவாளர் 2. திரு.முருகானந்தம் புகைப்பட அலுவலர் ஆகியோர்களிடம் ரூ.38,000/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் யாரிடமாவது கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பணம் கைப்பற்றப்பட்டதால், அந்த பணம் லஞ்சப் பணம் (Illegal Gratification) எனக் கருதப்படுவதால் மேற்படி அலுவலர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 24.09.2021 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் ரொக்கம் ரூ.38,000/- மற்றும் இதர ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்) திரு.ந.பாஸ்கர், கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (தற்காலிகம்), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், அரியலூர். பணிந்து சமர்பிக்கப்படுகிறது: அய்யா, இன்று 25.9.2021 – ஆம் தேதி மாலை 18.00 மணிக்கு புகாரைப் பெற்று அரியலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண். 2/2021, சட்டப்பிரிவுகள் 7 of prevention of Corruption Act 1988 (as amended in 2018) மற்றும் சட்டப்பிரிவு 102 CrPC –ன் படி வழக்கு பதிவு செயய்ப்பட்டது.

V.V 25/9/2021.
(V.வாணி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர்/ சிறப்பு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

V.V 25/9/2021.
(V.வாணி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.